# நீடித்த நாட்களால் உன்னைத் திருப்தியாக்குவேன். சங் 91 : 16

## உன்னைத் திருப்தியாக்குவேன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

தேவன் தரும் பிரதானமான ஆசீர்வாதங்களில் ஒன்று "**திருப்தியாகும்**". இன்று உலகத்தில் எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் அதிருப்தி. குடும்ப வாழ்க்கையில் அதிருப்தி. சபையில் அதிருப்தி. அரசியலில் அதிருப்தி. வேலை பார்க்கும் இடங்களில் அதிருப்தி. வெளிநாடுகளில் அதிருப்தி.

அதிருப்தியாகி சோர்ந்து போயிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மாதத்தில் உன்னை தேவன் திருப்தியாக்குவார். பலவிதமான சோதனைகளிலும், சோர்வுகளிலும், சிக்குண்டு, வாழ்க்கையை முடித்துவிடலாமா ? என்று எண்ணுகிறவர்களே

**தேவன் நீடித்த நாட்களால் உன்னை திருப்தியாக்குவேன்.** என்று வாக்களிக்கிறார். ஆமென்.

நான் வேலை செய்யும் இடத்தில் நீண்ட நாட்களால் என்னைத் திருப்தியாக்குவார். நான் ஓய்வு பெறும் இடத்தில் நீண்ட நாட்களால் என்னைத் திருப்தியாக்குவார். என் சொந்த இடத்தில் நீண்ட நாட்களால் என்னைத் திருப்தியாக்குவார் என விசுவாச அறிக்கை செய்யுங்கள்.

### நீடிய வாழ்வு தேவன் தரும் ஆசீர்வாதம்.

**சங். 90 : 10** : எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் – எனக் காண்கிறோம்.

**நீதி. 9 : 11** : என்னாலே உன் நாட்கள் பெருகும். உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.

**நீதி. 10 : 27** : கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப் பண்ணும்

**நீதி. 4 : 10** : என் மகனே, என் வார்த்தைகளை ஏற்றுக்கொள். அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்.

### ஆதலால், தேவன் தரும் ஆசீர்வாதங்களுள் ஒன்று 'நீடிய வாழ்வு'

**சங். 91 : 16** : நீடித்த நாட்களால் உன்னைத் திருப்தியாக்குவேன்.

**யாத்தி. 23 : 26** : உன் ஆயுசு நாட்களைப் பூரணப் படுத்துவேன்.

**சங். 103 : 5** : கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகும். போன்ற வசனங்களை அடிக்கடி படித்துப் பாருங்கள். ஒரு புதிய மகிழ்ச்சி பெருகும்.

### நாட்கள் நீடித்திருப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை

**உபா. 4 : 40** : நீ நன்றாயிருப்பதற்கும், நீடித்த நாளாயிருக்கும்படிக்கும் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளக்கடவாய்.

**உபா. 5 : 16** : உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.

**உபா. 5 : 33** : நீங்கள் பிழைத்து சுகித்து நீடித்திருக்கும்படி தேவனாகிய கர்த்தர் விதித்த வழிகள் எல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள்.

**உபா. 6 : 1 :** உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகள் இவைகளே.

### முதிர் வயதின் மரணம் ஆசீர்வாதமானது

**யோபு. 5 : 26 :** தானியம் ஏற்ற காலத்திலே அம்பாரத்திலே சேருகிறது போல, முதிர் வயதிலே கல்லறையில் சேருவீர்.

**ஆதி 25 : 8** : ஆபிரகாம் நல்ல நரை வயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் மரித்தான்.

**ஆதி. 35 : 28** : ஈசாக்கு விருத்தாப்பியமும் பூரண ஆயுசுமுள்ளவனாகி மரித்தான்.

**1 நாளா. 29 : 28** : தாவீது தீர்க்காயுசுள்ளவனாய் நல்ல முதிர் வயதில் மரணமடைந்தான்.

**யோபு 42 : 16** : யோபு நெடுநாளிலிருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான்.

**சங். 128 : 6** : நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய்.

**சங். 91 : 16** : என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்குவேன்.

### இயேசு சொன்னார். யோவா. 17 : 15

நீர் இவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் இவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**லூக்கா. 9 : 56** அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்.

### நல்ல நாட்களை காண வேண்டுமானால் ?

ஜீவனை விரும்பி நல்ல நாட்களை காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்கு தன் நாவை விலக்கிக் காக்கக்கடவன். **1 பேதுரு 3 : 10**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**நீடித்த நாட்களால் கர்த்தர் உன்னை திருப்தியாக்குவாராக.**